## நகர அபிவிருத்தி அதிகாரசபை- 2010

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.1 அபிப்பிராயம்

---------------------

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர்ந்தபட்ச தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும். இந்த அறிக்கையின் 1.1.1 மற்றும் 1.2 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் நிலைவரத்தினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப் பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.1.1 சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிக்கப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் துணைக் கம்பனிகளான ‘‘யூடீஏ ரெஸ்ட் ஹவுஸ் லிமிடெட்’’, ‘‘அர்பன் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் டிவலப்மென்ட் கம்பனி பிரைவெட் லிமிடெட்’’ , ‘‘பேலியகொட வெயார் ஹவுஸ் கம்பனி’’, ‘‘வோட்டர்ஸ் எட்ச் லிமிடெட்’’ ஆகிய நிறுவனங்களின் கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத வரைவு நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதன் காரணமாக ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மை கேள்விக்குரியதாக உள்ளது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபை 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நட்டத்தை அடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அதிகாரசபையின் திரண்ட நட்டம் ரூபா 1,253,873,241 ஆகும். அவ்வாறே தொகுதிக் கம்பனிகளின் தேறிய சொத்துக்கள் ரூபா 134,308,137 தொகையான எதிர்மறைப்பெறுமதியைக் காண்பிக்கின்றது. அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 151% ஆல் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக அரசாங்க நிதியுதவி இன்றி அதிகாரசபையின் தொடர்ச்சியான இயக்கம் நிச்சயமற்றதென அவதானிக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 தொகுதிக்கடன் வழங்குதல்

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

கொழும்பு நகரத்தில் குடிசைகளில் வசிப்பவர்களுக்கு 60,000 நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு நிதியத்தினை வழங்கும் நோக்கில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2010 ஒக்தோபர் மாதத்தில் ரூபா 10 பில்லியன் தொகைக்கு 5 வருடத்தின் பின்னர் மீளக் கொள்வனவு செய்யக்கூடிய தொகுதிக்கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றினைத் திரும்பச் செலுத்துவதற்காகவும் மூன்று வருட காலம் வரையான வட்டிக்காகவும் திறைசேரி பிணை நின்றது.

(அ) இத் தொகுதிக்கடனுக்காக 10% முதல் 11% வரையும் மற்றும் மாற்றமடையும் விகிதமான +0.75% ஆன வருடாந்த வட்டியும் செலுத்த வேண்டியிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய வட்டிப் பணம் ரூபா 264,835,293 ஆகும்.

(ஆ) மேற்கூறப்பட்ட வட்டி விகிதாசாரத்தின் கீழ் தொகுதிக்கடன் வழங்கலினால் பெறப்பட்ட ரூபா 10 பில்லியன் பணமும் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடபடுத்தப்பட்டாமல் 2010 ஆம் ஆண்டில் 7% வருடாந்த வட்டி விகிதத்தின் கீழ் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) அதிகார சபையினால் தொகுதிக்கடன் வழங்கலிலிருந்து ரூபா 10 பில்லியன் பணம் பெறப்பட்டு முதலீடு செய்ததில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 237,362,511 வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் செலுத்த வேண்டியிருந்த தொகுதிக் கடன்வட்டி ரூபா 264,835,293 ஆக இருந்தது. தொகுதிக் கடன் வழங்கலினால் பெறப்பட்ட பணம் இவ்வாறு குறைந்த வட்டிக்கு முதலீடு செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா 27,472,782 நட்டமொன்று

அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்தது. 2010 ஒக்தோபர் 05 ஆந் திகதி முதல் 2010 திசெம்பர் 31 வரை அவ்வாறு பெறப்பட்ட நாளாந்த சராசரியான நட்டம் ரூபா 315,779 தொகை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேலும் உரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தொகுதிக் கடன்கொடுத்தோருக்கு செலுத்தவேண்டிய வட்டிப் பணத்திற்கான திறைசேரியின் பிணை அபிவிருத்தி செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட காணிகள் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து அதிகாரசபை வருமானம் பெறும் காலம் வரையிலுமான மூன்று வருடங்களுக்காக மாத்திரமேயாகும். எனினும் தொகுதிக்கடன் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நிதியினை உபயோகத்திற்கு எடுத்து உரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2011 யூலை அளவில் ரூபா 871 மில்லியன்தொகை குறித்த 5 செயற்திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட 06 கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 1,464,029 தொகையானது இனங்காணப்படாத மீதியாகவும் 10 கட்டுப்பாட்டுக் கணக்குகளில் ரூபா 55,712,576 தொகையானது நானாவித மீதிகளாகவும் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளின் உண்மைநிலை தெளிவாக இனங்காணப்பட்டிருக்க வில்லை.

(ஆ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கடன் அடிப்படையில் ரூபா 95,345,851 தொகைக்கு அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் அதிகார சபையினால் 2010 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதி நிதிக்கூற்றுக்களில் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டிருந்த அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களிற்காக பெறவேண்டிய கட்டணம் மற்றும் வட்டி தொடர்பான தகவல்கள் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு செயற்திட்டங்களுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட ஆலோசனைச் சேவைகளுக்காக 1999 முதல் 2010 வரையான காலத்தில் ரூபா 11,750,827 தொகையொன்று நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செலுத்த வேண்டியிருந்த போதிலும் இத்தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் சில செயற்பாடுகளின் வரைவுக் கணக்குகள் தயாரிக்கும் போது சான்றுபடுத்தப்பட்டிராமையினாலும் உரிய அமைச்சிடமிருந்து நிதி கிடைக்காமையினாலும் கணக்கு வைக்கப்படாதிருந்ததாக அதிகாரசபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**1.2.3 இணக்கஞ்செய்யப்படாத கணக்குகள்**

**----------------------------------------------------**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 08 கட்டுப்பாட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகைக்கும் அவை தொடர்பான துணை ஏடுகளில் காட்டப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகைகளுக்கும் இடையே ரூபா 10,984,757 தொகையான தேறிய வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னாள் விருந்தினர் விடுதி முகாமையாளர்களின் நிலுவை மீதியானது விருந்தினர் விடுதி முகாமைத்துவப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 38,500,363 தொகையாகவும், கணக்கீட்டுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அந்நிலுவை மீதி ரூபா 20,387,022 ஆகவும் இருந்தமையினால் ரூபா 18,113,340 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) காணியும் கட்டிடங்களினதும் பெறுமதி ரூபா 3,750,639,423 எனவும் வியாபார இருப்புக்கள் ரூபா 1,054,269,198 எனவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி தொடர்பான விபரமான பட்டோலைகளை பரிசோதனை செய்த போது அப்பட்டோலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த சில விடயங்கள் சொத்துக்களாகக் கணிப்பீடு

செய்ய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டமையினால் மேற்கூறப்பட்ட பெறுமதி தொடர்பாக கணக்காய்வில் திருப்திப்பட முடியாதிருந்தது.

(ஈ) இறுதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை காணி பண்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 136,289,125 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை காணி பண்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தினால் செய்யப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 135,443,965 ஆக இருந்தமையினால் ரூபா 845,160 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் ரூபா 33.944,640 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் செய்யப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் ரூபா 51,843,285 ஆன தொகை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. உரிய இணக்கமின்மைகளை நீக்குவதற்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்பாடொன்றுக்கு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருப்பதாக அதிகாரசபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 விளமளிக்கப்படாத வித்தியாசங்கள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 11 கணக்குகள் தொடர்பாக பல ஆண்டுகளாகக் காணப்பட்டு வந்த எதிர்மறை மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 69,005,800 இனை இனங்கண்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகள் வரை மற்றும் ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாது நிலுவையாகக் காணப்பட்ட நானாவித முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 4,693,476 மற்றும் ரூபா 5,059,102 ஆக இருந்தன.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிச் செயற்திட்டங்களுக்குரிய வாடிக்கையாளரிடமிருந்து 02 முதல் 05 ஆண்டுகள் வரை மற்றும் ஐந்து வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாக நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 668,138,404 மற்றும் ரூபா 656,443,850 ஆக இருந்தன.

(இ) வெளிச் செயற்திட்டங்களுக்குரிய கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்த மீதியான ரூபா 1,944,764,835 தொகையில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 11,042,550 தொகையான அசாதாரண செலவு மீதியொன்று இருந்த போதிலும் அதனை இனங்கண்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2 முதல் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படாது காணப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,348,053 ஆக இருந்தது.

(உ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கொழும்பு மத்திய சிறப்பு சந்தைக் கட்டிடத்தொகுதி மற்றும் ஏனைய சந்தைக் கட்டிடத் தொகுதிகளிலிருந்தும் அறவிடப்படாது 1 முதல் 5 வருடங்கள் வரை நிலுவையாகக் காணப்பட்ட வாடகை வருமானம் ரூபா 440,683,235 ஆக இருந்தது.

(ஊ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் கடன் கணக்கில் ரூபா 1,256.554 கூட்டுத்தொகையான பயன்பாடற்ற கடன் மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

(எ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த வாடகை வருமானமாக ரூபா 34,217,283 காணப்பட்டதுடன் அது மொத்த வாடகை கடன்பட்டோர்களின் 60% இற்கு அதிகமாக இருந்தது. இதனுள் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்படுகின்ற வாடகை வருமானமும் இருந்ததுடன் அப் பணத்தினை அறவீடு செய்வதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தம்புள்ள புதிய நகர திட்டமிடல் வீட்டுத்திட்டத்தில் அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்களைப் பயன்படுத்துபவர்களினால் (குடியிருப்பாளர்கள்) வாடகைக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்ததுடன் நிலுவை வாடகைக் கட்டணத்திற்காக 5% ஆன மாதாந்த தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டும். 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அவ்வாறு அதிகார சபையினால் அறவிட வேண்டியிருந்த நிலுவைப் பணம் ரூபா 69,137,692 ஆக இருந்ததுடன் இச் சொத்துக்களைப் பயன்படுத்தும் 62 பேரில் 4 பேர்களிடம் மாத்திரம் உரிய வாடகைக் கட்டணத்தையும் தண்டப் பணத்தையும் அறவீடு செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ) முடிவுறுத்தப்பட்ட வாடகை குடியிருப்பாளர்களின் பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 96,451,810 ஆன நிலுவை வாடகை மீதியினை அறவீடு செய்வதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் அம்மீதிகளில் ரூபா 2,629,550 ஆன அசாதாரண எதிர்மறை மீதியொன்று காணப்பட்டது.

(ஒ) விளையாட்டு அமைச்சிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பணமாக ரூபா 84,683,449 தொகையானது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியினை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) சார்மஸ் களஞ்சியத் தொகுதியில் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் வாடகைக்கு பெற்றிருந்த களஞ்சியத்திற்காக 1995 பெப்ரவரி 25 ஆந் திகதி முதல் 1998 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையான காலத்திற்காக ரூபா 1,635,276 ஆன தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததாக அதிகார சபையினால் 2008 மே 08 ஆந் திகதி அக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அக்கடனினை அறவீடு செய்வதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) சார்மஸ் கட்டிடத் தொகுதியில் தனியார் கம்பனியொன்றுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்த கடைகளிலிருந்து அதிகார சபையினால் அறவிட வேண்டியிருந்த நிலுவை வாடகை 2010 ஓகத்து 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1.300,315 ஆக இருந்ததுடன் இக்கம்பனி தற்போது செயற்பாட்டிலில்லாதமை அவதானிக்கப்பட்டது. இந் நிலுவைப் பணத்தினை அறவீடு செய்வற்கு பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் கூட்டுறவு விற்பனை நிலைமொன்று நடாத்திக் கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 365,936 நிலுவை வாடகை 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்படாதிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டின் பின்னர் பின்தொடர்நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) தேசிய கடதாசிக் கம்பனியினால் 1990 மே 01 ஆந் திகதி முதல் 2003 யூன் 13 ஆந் திகதி வரை சார்மஸ் களஞ்சியத் தொகுதியில் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த களஞ்சியத்திற்காக பேரேட்டின் பிரகாரம் அறவிடவேண்டிய வாடகை ரூபா 10,680,648 ஆக இருந்தது. 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இப்பணத்தினை அறவீடு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.3 ஆம் பிரிவு மற்றும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 42 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம். | நட்டம் பெறுகின்ற நிறுவனமொன்று மிகையூதியக் கொடுப்பனவு செலுத்துவதானால் அது ரூபா 1,000 இற்கு வரையறுக்கப்பட்டிருந்தமையால் மிகையூதியக் கொடுப்பனவாக ரூபா 1,571,000 ஆன தொகையே செலுத்தவேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் 2010 ஆம் ஆண்டிற்கான மிகையூதியக் கொடுப்பனவாக ரூபா 9,579,000 ஆன தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.5 ஆம் பந்தி | பாதுகாப்பு சேவையினைப் பெறுவதற்காக 2010 ஆண்டினுள் ரூபா 4,032,000 தொகை முறையான உடன்படிக்கை கைச்சாத்திடல்கள் இன்றி வ/ப றக்னா லங்கா பாதுகாப்புக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 1987 செப்தெம்பர் 30 ஆந் திகதிய திட்டமிடல் சுற்றுநிருபத்தின் 8 ஆம் இலக்கம் மற்றும் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க சுற்றுநிருபம். | இரத்தினபுரி மாவட்டக் காரியாலயத்திற்குரிய 6 உள்ளுராட்சி நிறுவனங்களினால் அதிகார சபையின் சேவைக் கட்டணம் போன்ற வைப்புக்களைச் செய்வதற்கு வங்கிக் கணக்கு திறக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1991 யூன் 28 ஆந் திகதிய திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நிதி 295 ஆம் இலக்கம் மற்றும் 1997 சனவரி 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 116 ஆம் இலக்கம். | இச்சுற்று நிருபத்திற்கு முரணாக ஏனைய நிறுவனங்களுக்கு 14 உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக சம்பளமாக ரூபா 5,733,448 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2008 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 1459/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | கொழும்பு 03 பஹல பகதல 562/03 ஆம் இலக்க இடத்திலுள்ள கட்டிடத்தில் மேலும் இரண்டு மாடிகள் நிர்மாணிப்பதற்காக அறவிடவேண்டிய 1% சேவைக்கட்டணம் அறவிடப்பட்டிராததுடன் 1999 மற்றும் 2008 (திருத்திய) கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டமிடலின் பிரகாரம் அபிவிருத்தி செயற்பாடுகள் இன்மையினால் அறவிடவேண்டிய தண்டப்பணம் மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்கள் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1999 மற்றும் 2008 இன் திருத்தப்பட்ட கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம் | இத்திட்டமிடலுக்கு முரணாக நிர்மாணிக்கப்பட்ட தனியார் கம்பனிக்குரிய இரண்டு கட்டிடங்களுக்காக அறவிட வேண்டிய 10% தண்டப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| | (i) 9.3.1 Viii மற்றும் 9.10 ஆம் பிரிவுகள் | இச்சுற்று நிருபத்திற்கு முரணாக அதிகார சபையினால் 04 இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் அமைச்சரவையின் |

| | | | |
|---|---|---|---|
| | | | அங்கீகாரமின்றி மீளவும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| | (ii) | 9.2.சீ பிரிவு | அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரல்லாத 20 பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| | (iii) | 9.2.டீ பிரிவு | பதவியினரின் தரப்படுத்தலுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | 9.3.1 ஆம் பிரிவு | அதிகாரசபையின் ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறைகளின் பிரகாரம் பதவிகளுக்குரிய தீர்மானிக்கப்பட்ட பூர்த்திசெய்திருக்க வேண்டிய தகைமைகள் காணப்படாத உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். |
| | (v) | 8.3.3(அ) மற்றும் 6.5 ஆம் பிரிவுகள் | வருடாந்த அறிக்கை சபைக்குச் சமர்ப்பிக்கப்படாது மிகையூதியக் கொடுப்பனவு செலுத்த முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக 2004 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கை சபைக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | 1991 ஒக்தோபர் 08 ஆந் திகதிய நிருவாகப் பிரிவின் 06/91 ஆம் இலக்க சுற்றுநிருபம். | | இச்சுற்று நிருபத்தின் ஒழுங்கு முறைகளுக்கு முரணாக 40 உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஐ) | ICTAD/SDB/04 இன் III ஆவது அத்தியாயத்தின் 4.13 மற்றும் 14.3 ஆம் பிரிவுகள் | அதிகார சபையினால் அரசின் நிர்மாணங்களுக்குரிய ஆலோசனைச் சேவை வழங்கலின் போது கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான 6 பட்டியல்களில் ரூபா 55.98 மில்லியன் தொகையான கொடுப்பனவை சிபார்சு செய்த போது முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் திருகோணமலை பிரதேசத்தில் காணப்பட்ட அச்சுறுத்தல் நிலைமை காரணமாக இவ்வாறு செயற்பட வேண்டியிருந்ததாக கட்டுப்பாட்டதிகாரி அறிவித்திருந்தார். |
| (ஒ) | நி.பி 156(I) மற்றும் தாபனவிதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பந்தி | திருகோணமலை மாவட்டச் செயலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஆலோசனைச் சேவைகளின் போது ரூபா 8,810,470 (வெற் வரி தவிர்த்து) தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் தமது சேவையினை எவ்வித பொறுப்புடனும் அமுல்படுத்தியிருக்கவில்லை. |
| (ஓ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவு | உள்ளூராட்சி, கைத்தொழில்கள், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் நீர்ப்பாசனம், மின்சக்தி மற்றும் பெருந்தெருக்கள் விடயங்களுக்குரிய 06 அமைச்சுக்களைப் பிரதி நிதித்துவம் செய்யும் வகையில் முகாமைத்துவ சபைக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஔ) | 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் | குறைந்த செலவு வீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி வழங்கலுக்காக சொத்துக்களை அபிவிருத்தி செய்வோர்களிடமிருந்து சேவைக் |

| | |
|---|---|
| சட்டத்தின் 16(1)(உ) ஆம் பிரிவு | கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சேகரிக்கப்படுகின்ற சகல பணமும் நகரக் குடியிருப்பு அதிகார சபையின் நிதியத்திற்காக வழங்கப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. 2011 ஆம் ஆண்டிலிருந்து இக்கட்டண அறவீடு கைவிடப்பட்டிருந்ததாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கீழே குறிப்பிடப்படும் கணக்கு விடயங்களுக்குரிய கடிதக் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அக்கணக்கு விடயங்களை திருப்திகரமானதாக சான்றுறுதிசெய்ய முடியாதிருந்தது.

(i) 5/2/42/2 2010 மற்றும் 5/2/4/3/2010 ஆம் இலக்க அதிகாரப் பிரிவின் கடிதக்கோவை.

(ii) 10/2/1465 மற்றும் 10/2/880 ஆம் இலக்க காணிப்பிரிவின் கடிதக்கோவை.

(iii) 05/05/10/01/06/01 ஆம் இலக்க கடிதக்கோவை.

(iv) ரூபா 69 மில்லியன் தொகை கொடுப்பனவு விபரங்களடங்கிய மஹியங்கனை சுற்றுலா விடுதி நவீன மயப்படுத்தலுக்குரிய கடிதக்கோவை.

(ஆ) 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிலும் கடந்த 4 ஆண்டுகளிலும் அதிகாரசபையின் செயற்பாடுகளால் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டிருக்கின்றன.

**ரூபா மில்லியன்களில்**


| | **2010** | **2009** | **2008** | **2007** | **2006** |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 845 | 745 | 713 | 646 | 611 |
| ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | 228 | 215 | 189 | 242 | 210 |
| | 1073 | 960 | 902 | 888 | 821 |
| நிர்வாக மற்றும் பொதுச் செலவுகள் | (1189) | (913) | (862) | (878) | (675) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | (23) | (268) | (300) | (372) | (623) |
| செலவுகளின் கூட்டுத்தொகை | (1212) | (1181) | (1162) | (1250) | (1298) |
| நிதிக் கிரயத்திறகு முன்னர் செயற்பாட்டு நட்டம் | (139) | (221) | (260) | (362) | (477) |
| நிதிக் கிரயம் | (5) | (11) | (22) | (26) | (28) |
| நிதிக் கிரயத்திற்குப் பின்னர் செயற்பாட்டு நட்டம் | (144) | (232) | (282) | (388) | (505) |
| செயற்பாடற்ற நட்டம் | 14 | 14 | 14 | 14 | 14 |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான கொடுப்பனவு | (8) | - | - | - | - |
| வரிக்கு முன்னர் தேறிய இலாபம்/ (நட்டம்) | (138) | (218) | (268) | (374) | (491) |
| வரி | (6) | (13) | (12) | (20) | (5) |
| வரிக்குப் பின்னர் தேறிய இலாபம்/ (நட்டம்) | (144) | (231) | (280) | (394) | (496) |

ரூபா 218 மில்லியனான முன்னைய வருடத்தின் வரிக்கு முன்னரான நட்டமாகவும் மீளாய்வாண்டின் ரூபா 138 மில்லியன் நட்டமாக ரூபா 80 மில்லியனினால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சேகரிக்கப்பட்ட நகரக் குடியிருப்பு அபிவிருத்தி

அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம் அவ் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 136 மில்லியன் தொகை அவ்வாறு செலுத்தப்படாது அதிகார சபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தமையினால் இந்நிலைமை உருவாகியிருந்ததுடன் அவ்வாறில்லையானால் வருடத்தின் வரிக்கு முன்னரான நட்டம் ரூபா 274 மில்லியன் அல்லது 26% பாதகமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டிருக்கும்

அதிகார சபை 2006 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நட்டத்தைப் பெறுவதன் காரணமாக அதன் தேறிய சொத்துக்கள் கணிசமான அளவில் குறைவடைந்துகொண்டு செல்கின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இந் நிலைமை அதிகார சபையில் தொடர்ந்து காணப்படுதல் நேரடியான அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. அதிகாரச சபையின் தேறிய சொத்துக்களின் குறைந்து செல்லும் தன்மை பின்வரும் வரைபு மூலம் தெளிவாக புலனாகின்றது.

**தேறிய சொத்துக்களின் குறைவு**




**2.2 செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------------

**2.2.1 நிதிக்கட்டுப்பாடு**

-----------------------

2008 யூன் 10 ஆந் திகதி முதல் 2010 திசெம்பர் வரையான காலப்பகுதிகளில் அதிகார சபைக்கு கிடைத்து வைப்புச் செய்யப்பட்ட ரூபா 964,826 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியை மீள அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 மனிதவள முகாமைத்துவத்தின் பலவீனங்கள்**

---

பின்வரும் அவதானிக்கப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகார சபையின் பல்வேறு பதவிகளுக்காக 2010 ஆம் ஆண்டினுள் 42 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களிடமிருந்து உயர்வானதும் செயற்திறனானதுமான சேவையினைப் பெறக்கூடிய வகையில் போதியளவில் கடமைகள் கையளிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியினர் எண்ணிக்கை 1,669 ஆக இருந்ததுடன் முறையற்ற ஆட்சேர்ப்புக்களின் காரணமாக உள்ளவாறான பதவியினர் எண்ணிக்கை 1,768 ஆகக் காணப்பட்டமையினால் பதவியினர் எண்ணிக்கை 165 ஆக இருந்தது. எவ்வாறாயினும் இவ் எண்ணிக்கையினுள் 231 நிரந்தரமற்ற பதவியினர் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மிகையாக இருந்த பதவியினர் எண்ணிக்கை 165 ஆக இருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையினுள் காணப்பட்ட உள்ளவாறான பதவிகளில் 292 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) அதிகாரசபையின் மனிதவள முகாமைத்துவத்தில் வினைத்திறமைகள் அமுல்படுத்தப்படாதிருந்த கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டவைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) பதவியினரின் கல்வித் தலைமைச் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்படாமை.

(ii) பதவியினர் அங்கத்தவர்களின் சுயவிபரக்கோவைகள் பாதுகாப்பாக வைக்கப்படாமை.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 75 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹொரண பஸ்நிலையமும் அதிலுள்ள 10 கடைகளும் 2009 மே 12 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும் நாளாந்த பிரச்சினைகள் காரணமாக 2010 இன் இறுதி வரையிலும் அக்கடைகளை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 ஆம் ஆண்டில் ரூபா 16 மில்லியன் செலவில் சோண்டர்ஸ் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 106 வியாபாரக் கடைகளையுடை வியாபாரக் கட்டிடத் தொகுதி இவ் அறிக்கைத் திகதி வரையும் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 7,361,736 செலவில் இரத்தினபுரி நகரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாகனத் தரிப்பிடங்கள் இரண்டினதும் செயற்பாடுகள் பூர்த்தியடைந்து 15 மாதங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் இவ்அறிக்கைத் திகதி வரையும் அவைகள் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மோதர அளுத் மாவத்தையில் அமைந்துள்ள நான்கு ஏக்கர் அளவான காணியில் திறசர புறவர என்ற பெயருடைய வீடமைப்புத்திட்டத்திற்காக 2001 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்தது. காணிச் சுவீகரிப்புச் செய்தல் வைப்பாக 2000 ஆம் ஆண்டில் ரூபா 26 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் இது வரையில் மேலும் செலுத்த வேண்டிய நிலுவை இழப்பீடு மற்றும் வட்டிப் பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 199 மில்லியனாக இருந்தது. மேலும் 10 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் எவ்வித செயற்திட்டமொன்றும் இந் நிலத்தில்

அமுல்படுத்தப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலேனும் அதிகாரசபையினால் முடியாதிருந்தது.

**2.2.4 அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படுதல்**

---

அதிகார சபையினால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மோட்டார் வாகனமொன்றுடன் ஒரு சாரதியும், போக்குவரத்து அமைச்சிற்கு ஒரு சாரதியும், கதிர்காமம் பிரதேச சபைக்கு ஒரு டெக்டரும் வழங்கப்பட்டிருந்தது. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை காணிகளைப் பண்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்திற்காக எரிபொருள் மற்றும் ஏனைய செலவினங்களாக ரூபா 40,297 அதிகாரசபையினால் 2010 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்தது.

**2.2.5 பிரயோசனமற்ற முதலீடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஓசன் விவ் டிவலொப்மென்ட் தனியார் கம்பனி ரூபா 92,000,000

---

2005 இலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையிலும் எவ்வித பரதிபலனும் கிடைத்திருக்காததுடன் உரிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனி ஒரு பொதுக்கம்பனியாக மாற்றப்பட்டு முதலீட்டுப் பணத்தை மீளப் பெறுவதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரீல் கம்பனி - ரூபா 28,950,000

---

2005 ஆம் ஆண்டிலிருந்து பிரதிபலனொன்றும் கிடைத்திருக்காததுடன் அதிகாரசபையினால் கம்பனிக்கு வாடகைக்கு விடப்பட்ட காணிகளின் பெறுமதியில் 18% ஆன முதலீட்டிற்கான பரதிபலன் ஒன்றும் பெறப்பட்டிருக்கவில்லை. இக்காணி அபிவிருத்தி செய்யப்படாமையின்

காரணமாக வாடகை ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டு மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) பேலிய கொட வெயார் ஹவுஸ் - ரூபா 299,999,930

எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்காததுடன் கம்பனி நீண்டகாலமாக நட்டத்தைப் பெறுவதன் காரணமாக சந்தைப் பெறுமதி குறைவடைந்தமைக்காக 100% ஏற்பாடொன்று மேற்கொள்ள்பட்டிருந்தது.

**2.2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது அறவிடவேண்டிய சேவைக்கட்டணமான ரூபா 100 மில்லியன் பெறுமதியில் ரூபா 85 மில்லியன் குறிப்பிட்ட பிரகாரம் தவணைகளில் செலுத்தாமையினால் நிலுவையாகக் ககாணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் செலுத்த வேண்டியிருந்த 104 தவணைகளில் 13 தவணைகளுக்கு மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலத்தினுள் செலுத்துவதற்கு முடியாதிருந்தமை மற்றும் அப்பணத்தினை அறவீடு செய்வதற்கான முறையான செயற்பாடுகளை எடுப்பதற்கு அதிகாரசபை முடியாதிருந்தமை என்பன ஆகும். விபரங்கள் கீழே காணப்பிக்கப்படுகின்றது.

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அறவிடப்படுகின்ற சேவைக்கட்டணம் தவணை அடிப்படையில் அறவிடப்படுவதுடன் பெறப்படுகின்ற தவணைக்காக வழங்கப்பட்டுள்ள காலத்திற்கு 18% ஆன வட்டியினை அறவீடு செய்யும் கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருந்த போதும் 08 நிறுவகங்களினால் செலுத்தவேண்டிய ரூபா 9,806,287 ஆன வட்டிப்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கடன் அடிப்படையில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 94,251,659 வருமானமொன்று உரித்தற்ற நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) காணி கட்டிடங்கள் விற்பனைகளுக்கான முகாமைத்துவத் தீர்மானங்கள் இன்மையின் காரணமாக 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2010 ஆம் ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்களின் விற்பனை 92% இனால் குறைவடைந்திருந்தது. ஏனெனில் 2010 ஆம் ஆண்டின் போது தேர்தல்கள் நடைபெற்றமையினால் அரச சொத்துக்களை வாடகைக்குவிடல் விற்பனை செய்தல் போன்ற அகற்றுதல்கள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தமையினால் இந்நிலைமை ஏற்பட்டதாக கட்டுப்பாட்டதிகாரி அறிவித்திருந்தார்.

### 2.2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 3,694,548 தொகையான வருமானமொன்று அதிகாரசபைக்கு உரித்தற்றிருந்த 11 மாடியினைக் கொண்ட நிர்மாணத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படடிருந்ததுடன் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்கூறப்பட்ட கட்டிடத்திற்காக கொழும்பு மாநகர சபையினால் விநியோகிக்கப்பட்டிருந்த இணக்கச் சான்றிதழ் 2010 மார்ச் 10 ஆந் திகதி நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணமாக கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டமிடங்களுக்கு முரணாக உரியகட்டிடம் நிர்மாணிப்பு, தற்போதும் விடுதிகளின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படுகின்றமை மற்றும் உரிய அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்திற்கு முரணான நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையாகும்.

(ii) உரிய அங்கீகாரத்தினால் தீர்மானிக்க முடியாத இந் நிர்மாணங்களுக்குரிய நிர்மாணிப்புக் கிரயத்தின் 30% ஆன ரூபா 5,541,882 தொகையான கட்டணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 10% அல்லது ரூபா 1,847,274 தொகை தீர்மானிக்கப்பட்ட காரணத்தினால் அதிகார சபை ரூபா 3,694,548 வருமானமொன்றை இழந்திருந்தது.

(iii) மேலே குறிப்பிடப்பட்ட தொகையினை குடியிருப்பாளர்களின் உரித்துறுதிகள் விநியோகத்தின் போது செலுத்தும் உடன்பாட்டில் இந்நிர்மாணத்திற்காக அதிகார சபையினால் 2010 மார்ச் 15 ஆந் திகதி திரும்பவும் அபிவிருத்தி அநுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டு 10 நாட்களில் அதாவது 2010 மார்ச் 25 ஆந் திகதி இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(iv) கொழும்பு மாநகர சபையினால் இணக்கச் சான்றிதழ் நிராகரிக்கப்பட்டமைக்கான எவ்வித காரணமும் வெளிப்படுத்தப்படாமல் அதிகார சபையினால் அவர்களது இணக்கச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(v) மேற் கூறப்பட்ட கட்டிடத்தின் நில அளவின் விகிதாசாரம் மற்றும் கட்டிடத்தின் எல்லை போன்றவை கொழும்பு நகர அபிவிருத்தி திட்டமிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்டிராததுடன் அதன் காரணமாக அறவிட வேண்டியிருந்த தண்டப்பணம் அறவிடப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபையினால் ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஆலோசனைச் சேவை வழங்கலின் போது தொழிற் பயிற்சியினை விசுவாசமுள்ளதாக செயற்படுத்தாது பிழையாகச் செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. உதாரணமாக திருகோணமலை மாவட்டச் செயலகக் கட்டிடம் நிர்மாணத்திற்கு ரூபா 19 மில்லியனுக்கும் அதிகமாக முடிவுறாத செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதாக கொடுப்பனவுக்கு சிபார்சு செய்தமை மற்றும்

முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படாது ரூபா 61 மில்லியன் தொகையொன்றைச் செலுத்துவதற்கு சிபார்சு செய்திருந்தமை என்பன காணக்கூடியதாக இருந்தது.

(இ) சகல பயன்படுத்தப்படாத வயற்காணிகளிலும் தாழ் நிலங்களிலும் மண்நிறைத்தல்களைக் கைவிடும்படியான அமைச்சரவைப் பத்தரத்தின் 03/0867/123/013/EPC/366 ஆம் இலக்கத்திற்கு முரணாக பத்தரமுள்ள தலங்கம குளத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள இலக்கம் 2265 இனையுடைய வரைபடத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இங்கே திட்டமிடல் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்காமையும் அதிகார சபையின் திட்டமிடல் உத்தியோகத்தர் ஒருவர் பங்குபற்றாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரசபையினால் இயலாதிருந்தது.

(ஈ) கொழும்பு 06 டபிள்யு.ஏ.சில்வா மாவத்தை 65 ஆம் இலக்கத்திலுள்ள 02 மாடிகளைக் கொண்ட காரியாலயக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக கொழும்பு மாநகர சபையினால் 2007 யூலை 04 ஆந் திகதி அபிவிருத்தி அனுமதிப்பத்திரமொன்று விநியோகிக்கப்பட்டிருந்தது. பின்னர் அனுமதியின்றிய ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு புடவைகள் விற்பனை செய்யும் வியாபாரமொன்று நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இவ்வாறிருக்கையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கட்டிட உரிமையாளருக்கு 2006 யூலை 17 ஆந் திகதியில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2007 சனவரி 22 ஆந் திகதியில் இணக்கச் சான்றிதழின் பிரதி கட்டிட உரிமையாளரினால் சமாப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஆராய்ந்து பார்த்த போது போலியான அபிவிருத்தி அதிகாரப்பத்திரமும் இணக்கச் சான்றிதழும் அபிவிருத்தியாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அவ் ஆவணங்கள் இலஞ்ச ஊழல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) அம்பாறை நகரில் அமைந்துள்ள தனியார் விடுமுறை சுற்றுளா விடுதிக்கு அபிவிருத்தி அனுமதிப் பத்திர விநியோகத்தின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு தரப்படுகின்றது.

(i) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அறவிட வேண்டியிருந்த ரூபா 10,366,673 கட்டணத்தை அறவீடு செய்யாமல் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ii) அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்கு முன் உரிய இடத்தில் 4193 சதுர மீற்றரில் மூன்று மாடியினையுடைய சுற்றுளா விடுதி நிர்மாணங்கள் முழுவதும் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை.

(iii) இக்கட்டிடம் அமைந்துள்ள காணியின் விடுவிப்புத் தன்மை மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டமை என்பவற்றை உறுதிப்படுத்தாது அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஊ) டீ ஆர் விஜேவர்தன மாவத்தையிலுள்ள வாகனத்தரிப்பிடம் முறையான நடைமுறைகளின்றி ரூபா 47,500 மாதாந்த வாடகைக்கு வெளிவாடகையாளருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளவும் அத்தொகை ரூபா 30,000 வரை குறைக்கப்பட்டிருந்தது. வாகனங்கள் பாரிய அளவில் நிறுத்தக்கூடிய இவ்வாகனத் தரிப்பிடத்தை அதிகார சபையினால் முறையாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து பராமரித்து கூடுதலான வருமானமொன்றை அதிகார சபை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.8 செயலாற்றல்**

-------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 4751 மில்லியனான அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களில் அமுல்படுத்த வேண்டியிருந்த செயற்பாடுகளில் 2010 ஆம் ஆண்டில் எதுவும் அமுல்படுத்தப்படாதிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 07 ஆகும்.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 02 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட செலவினம் ரூபா 60,295,992 ஆக இருந்தது.

(இ) 3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த காலம் கடந்திருந்ததுடன் இச் செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 90 மில்லியனாக இருந்தது.

(ஈ) காணிகள் சுவீகரிக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமல் சில செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 7 ஆக இருந்ததுடன் அச் செயற்திட்டங்களுக்காக ரூபா 239,177,230 செலவு செய்யப்பட்டிருந்தது.

(உ) பெரும்பாலமான செயற்திட்டங்கள் தொடர்பாக 2009 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கைகளின் நிலைமை 2010 ஆம் ஆண்டினுள்ளும் அவ்வாறே காணப்பட்டமையினால் அதிகார சபையின் செயற்திட்டங்களின் 2010 ஆம் ஆண்டின் செயலாற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3. நோக்கங்களுக்கு முரணான செலவினம்

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு முரணாக அதிகார சபைக்குச் சொந்தமான மஹியங்களை வீ.ஐ.பீ (VIP) சுற்றுளா விடுதியை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 69 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2009 இன் பாதீட்டில் உள்ளடக்காது செலவு மதிப்பீடு தயாரிக்கப்படாமல் இந் நிர்மாணங்களில் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தப் பெறுமதிக்கு ஒப்பீடாக மேலதிக வேலைகள் மிகவும் உயர் பெறுமதியையொன்றை எடுத்திருந்ததுடன் அதற்கு அவசியமான உபகரணங்களுடன் பின்னர் சுற்றுளாவிடுதி இலங்கை இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------------

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறானவற்றிற்கு இடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆளணி முகாமைத்துவம்

(ஆ) அபிவிருத்தி அனுமதிப்பத்திர விநியோகங்கள்

(இ) வருமானங்களைக் கணக்குகளுக்கு கொண்டு வருதல்.

(ஈ) கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவீடு செய்தல்.

(உ) வாடிக்கையாளர்களிடமிருந்து முற்பணங்களைப் பெற்றுக்கொள்ளல்